

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.3.2025), சென்னையில், நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.3.2025) சென்னையில், நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமார் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.3.2025) சென்னையில், நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தெலங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டிக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.3.2025) சென்னையில், நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.3.2025) சென்னையில், நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த பாரத் ராஷ்டிர சமிதி கட்சியின் கே.டி. ராமாராவ் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

# அழைத்த தமிழ்நாடு! அணிவகுத்த மாநிலங்கள்!

## மாநில முதல்வர்கள் – கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

**சென்னை, மார்ச் 24-**

**மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தென் மாநிலங்களின் தொகுதிகளை குறைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு சதி செய்து வருகிறது. இந்த அரசியல் உள் நோக்கத்தை உணர்ந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 5ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டி விவாதித்தார்.**

தொகுதி மறுசீரமைப்பு விவகாரத் தில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதித்து முடிவெடுக்கவும், போராட்டத்தை முன்னெடுக்கவும் தென்மாநிலங்களின் எம்.பி.க்கள் கொண்ட கூட்டு நடவடிக்கைக் குழுவை அமைப்பது என முடிவெடுக்கப் பட்டது.

இதுதொடர்பாக 7 மாநில முதலமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதினார். மேலும், தி.மு.க. நிர்வாகிகள் அடங்கிய குழுவினர், கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களுக்கு நேரில் சென்று அம்மாநில அரசியல் தலைவர்களை சந்தித்து தொகுதி மறுசீரமைப்பின் பாதிப்புகள் குறித்து எடுத்துரைத்தனர்.

சென்னையில் நடைபெறும் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்க வருமாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சார்பில் அழைப்பு விடுத்தனர். அதன்படி, தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்பான முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற முதல்வர்கள் கட்சித் தலைவர்கள் வருமாறு:-

கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், தெலங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமார், கேரள மாநில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பினாய் விஸ்வம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் கும்பக்குடி சுதாகரன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் சலாம், கேரளா காங்கிரஸ் கட்சியின் பிரான்சிஸ் ஜார்ஜ், கேரளா காங்கிரஸ் (மணி) கட்சியின் ஜோஸ் கே. மணி, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் பிரேம சந்திரன், தெலங்கானா மாநில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மகேஷ் கவுட், பாரத் ராஷ்டிர சமிதி கட்சியின் கே.டி. ராமாராவ் மற்றும் வினோத் குமார், அகில இந்திய மஜ்லிஸ்-இ-இத்தேஹாதுல் முஸ்லிமீன் கட்சியின் இம்தியாஸ் ஜலில், பஞ்சாப் மாநில சிரோன்மணி அகாலி தள கட்சியின் சர்தார் பல்வீந்தர் சிங் மற்றும் தல்ஜித் சிங் சீமா, பிஜு ஜனதா தளக் கட்சியின் அமர் பட்நாயக் மற்றும் சஞ்சய் குமார் தாஸ் பர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




பத்தமடை பாய், தோடர்களின் சால்வை, காஞ்சிபுரம் கைத்தறி பட்டுப் புடவை, ஊட்டி வர்க்கி, கன்னியாகுமரி கிராம்பு, கோவில்பட்டி கடலை மிட்டாய், ஈரோடு மஞ்சள், கொடைக்கானல் பூண்டு ஆகிய தமிழ்நாட்டின் சிறப்பு வாய்ந்த பொருட்கள் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரித்த அழகிய பெட்டியில் அடுக்கப்பட்டு விருந்தினர்களுக்கு பரிசாக அளிக்கப் பட்டது.

## தமிழ்நாட்டின் சிறப்பு வாய்ந்த பொருட்கள் அடங்கிய பரிசுப் பெட்டகம்!

### தலைவர்களுக்கு பரிசுப் பெட்டகத்தை வழங்கினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

**சென்னை, மார்ச் 24-**

**தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டத்தில் பங்கேற்ற 7 மாநிலங்களின் பிரதிநிதிகளுக்கு தமிழ்நாட்டின் சிறப்பு வாய்ந்த பொருட்கள் அடங்கிய பரிசுப் பெட்டகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

சென்னையில் நடைபெற்ற தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டத்தில், 7 மாநிலங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அவர்களுக்கு தமிழ்நாட்டின் அடையாளங்களாக விளங்கும், புவிசார் குறியீடு பெற்ற பொருட்களான பத்தமடை பாய், தோடர்களின் சால்வை, காஞ்சிபுரம் கைத்தறி பட்டுப்புடவை, ஊட்டி வர்க்கி, கன்னியாகுமரி கிராம்பு, கோவில்பட்டி கடலை மிட்டாய், ஈரோடு மஞ்சள், கொடைக்கானல் பூண்டு ஆகிய பொருட்களை, மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரித்த அழகிய பெட்டியில் வைத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.




கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் வைக்கப்பட்ட பெயர்பலகைகள் மொழி பெயர்ப்பு கருவிகள்..